
ரஷ்யா
2
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

“அணுகுண்டு போன்ற ஏதோ ஒரு
காரியத்தை ருஷியாவானது வாடிகன்
மேல் போட்டு ஒரு மணி நேரத்தில்
அழித்துவிடுமென்று” கர்த்தர்
உரைக்கிறார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 54-05-13 மிருகத்தின் முத்திரை

134. அங்கே இருக்கிற அந்த சிவந்த வலுசர்ப்பமாகிய சாத்தான், அவனுடைய இருக்கை எங்கே இருக்கிறது? ருஷ்யாவில் இல்லை ரோமாபுரியில் இருக்கிறது. சாத்தான் அவனுடைய இருக்கையையும், அவனுடைய அதிகாரத்தையும், அவனுக்கு கொடுத்தான். சிவந்த வலுசர்ப்பம் ருஷியா அல்ல.

135. ருஷியாதான், அந்திகிறிஸ்து என்று, மகத்தான போதகர்கள் கூறுகிறதை நான் செவியால் கேட்டிருக்கின்றேன்.

136. ஏன்? ருஷியாவிற்கும் அந்தி கிறிஸ்துவுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அது கம்யூனிஸம். புராட்டஸ்டன்ட்

இசமும், கத்தோலிக்க இசமுமாகிய இவை களின் தவறுகள்தான் கம்யூனிஸத்தை உருவாக்கினது, அவர்களை ருஷியா வெளியே துரத்துவதற்கான காரணம், என்னவென்றால் அவர்கள் எல்லா பணத்தையும் தங்களிடத்திலே வைத்துக் கொண்டிருந்தார்கள். பரிசுத்தவான்களாகிய அவர்களிடத்தில் எல்லா ஜெபங்களையும் கூறும்படியாய் கூறினார்கள். எனவே மிகப் பெரிதான கட்டிடங்களையும் கட்டினார் கள். ஜனங்களுடைய சொத்துக்களையெல் லாம் இவர்கள் உடையவர்களாக இருந்து அதை இந்த விதமாக சுருட்டி கொண் டார்கள் அவர் களுடைய ஜீவியத்தில் வித்தியாசமே இல்லை. உலகத்தில் இருக் கும் மற்ற ஜனங்களின் ஜீவியத்திற்கும் இவர்களுக்கும் வித்தியாசமே இல்லை. அவர்கள் அதை வெளியே துப்பிவிட்டு,

கம்யூனிஷக் கொள்கையை உருவாக்கினார்கள்.

137. நீங்கள், எனக்கு இன்னும் ஒருநாள் தருவீர்களானால், தேவன் தருவாரானால் ரோமாபுரியை அழிக்கத்தக்கதான கம்யூனிஸமானது சர்வவல்லவரின் கரங்களில் இருப்பதை நேராக நிரூபிப்பேன். நினைவிருக்கட்டும், தேவனுடைய தீர்க்கதரிசி என்ற முறையில் நான் இதை கூறுகிறேன். **“அணுகுண்டு போன்ற ஏதோ ஒரு காரியத்தை ருஷியாவானது வாடிகன் மேல் போட்டு ஒரு மணி நேரத்தில் அழித்து விடுமென்று” கர்த்தர் உரைக்கிறார்.** கொடூர இருதயமுள்ள மனிதர்களை தேவன் எடுத்து அவர்களை அவருடைய கரத்தில் வைத்துக்கொண்டார். அவருடைய சித்தத்தை நிறைவேற்ற, அவர்களுக்கு நேரிட வேண்டியதை சரியாக அப்படியே


நிறைவேற்ற அவர்கள் அவருடைய கரத்தில் அவருடைய கருவிகளாக இருக் கின்றார்கள். சரியா அப்படியேதான் அதுதான் வார்த்தை.

138. சகோதரனே எவ்வளவு ஏமாற்று கரமான காரியங்கள் இருக்கிறது என்ப தனை நீங்கள் உணராமல் இருக்கின்றீர்கள். நினைவிருக்கட்டும். தெரிந்து கொள்ளப் பட்டவர்களை வஞ்சிக்கத்தக்கதான அந்தி கிறிஸ்து நெருக்கமாக இருப்பான் என்று இயேசு கூறியிருக்கிறார். “ஒரு மனிதனும் உங்களை வஞ்சிக்க இடம் கொடாதீர்கள்” என்று கூறியிருக்கிறார். “மரியாளே வாழ்க, நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் கிருபை நிறைந் தவள், நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்” என்ற ஜெபத்தை அஞ்ஞானிகளைப் போன்று திரும்ப, திரும்ப அதையே கூறாதீர்கள், அஞ்ஞானிகளைப் போன்று இராதேயுங் கள் “வீண்வார்த்தைகளினால் அலப்பாதே

யுங்கள்", "பூமியில் ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதேயுங்கள் பரலோகத்தில் இருக்கிற ஒருவரே உங்கள் பிதாவாக இருக்கிறார்" என்று இயேசு கூறியிருக்கிறார்.



ருஷியாவில் கம்யூனிஸம் எழும்பக் காரணம் என்ன—என்ன—என்ன? அங்குள்ள ரோமசபையும், மற்றவைகளும் அசூசிப்பட்டிருந்த காரணத்தால்தான். ருஷியாவில் அவர்கள் பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு ஜனங்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் அவர்களை சாகும்வரை பட்டினி கிடத்தினர். அதற்குப் பதிலாக உலகிலுள்ள மற்றவரைப் போல் வாழ்ந்தனர்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0318 — முதலாம் முத்திரை

இந்த பெரிய காரியம் அங்கே நிகழ்ந்துகொண்டே வந்து, இந்த பெரிய ஸ்தாபனங்களெல்லாம் ஒன்று சேர்ந்து கம்யூனிஸத்தை எதிர்க்கும்போது, அவர் களை ஜெயிப்பதற்காகவென்றே தேவன் கம்யூனிஸத்தை எழுப்பியுள்ளாரென்பதை அவர்கள் அறியார்கள். நிச்சயமாக.

390 ருஷியாவில் கம்யூனிஸம் எழும்பக் காரணம் என்ன—என்ன—என்ன? அங்குள்ள ரோமசபையும், மற்றவைகளும் அசூசிப்பட்டிருந்த காரணத்தால்தான். ருஷியாவில் அவர்கள் பணத்தையெல் லாம் எடுத்துக்கொண்டு ஜனங்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் அவர்களை சாகும்வரை பட்டினி கிடத்தினர். அதற்குப்

பதிலாக உலகிலுள்ள மற்றவரைப் போல் வாழ்ந்தனர்.

391 நான் சமீபத்தில் மெக்ஸிக்கோ வுக்குச் சென்றிருந்தபோது, அங்குள்ள ஏழைபிள்ளைகளைக் கண்டேன். எந்த கத்தோலிக்க தேசமும் தங்கள் ஜீவனாம்சத் துக்கு வேண்டியவைகளை போதுமான அளவுக்குப் பெற்றிருக்கவில்லை. அவை களில் ஒன்றும் அவ்வாறு இல்லை. எங்கே என்று கேட்கிறீர்களா? அவைகள் எங்கே என்று எனக்குக் காண்பியுங்கள். எந்த ஒரு கத்தோலிக்க தேசமும் தனக்கு வேண்டிய வைகளைப் பெற்றிருக்கவில்லை. பிரான்சு, இத்தாலி, அவைகள் யாவும், மெக்ஸிக்கோ போன்றவை. நீ எங்கே சென்று பார்த்தாலும், அவைகளுக்கு சுய உதவியே இல்லை. ஏன்? சபையானது அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் பறித்துக்

கொண்டு விடுகிறது. ஆகையால்தான் ருஷியா கிறிஸ்தவ மார்க்கத்தை உதைத்து தள்ளிற்று. என்ன சம்பவித்தது என்பதைக் கவனியுங்கள்.

392 நானே இதை அறிவேன். நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஆலயமணி அடிப்பதைக் கேட்டபோது, ஏதோ பொன்விழாதான் அங்கு கொண்டாடப் போகின்றனர் என்று நினைத்தேன். ஆனால், ஒரு ஏழ்மையான பெண்மணி காலை இழுத்து இழுத்து நடந்துவர அவளது தகப்பனார் அவள் குழந்தைகளைச் சுமந்து கொண்டு வந்தார். அக்குழந்தைகள் இரண்டோ அல்லது மூன்றோ அழுது கொண்டிருந்தன. மரித்த ஒரு ஸ்திரீக்கு அங்கே அந்தப் பெண்மணி நோன்பு செய்துகொண்டிருந்தாள். அதன் மூலம் அவள் பரலோகத்துக்கு செல்லலாம்

என்று எண்ணிக்கொண்டாள். ஓ, என்னே ஒரு பரிதாபமான செயல்!

393 அப்பொழுது நான் அங்கு நின்று கவனித்துக் கொண்டிருந்தேன்...கத்தோலிக்க நாடுகளிலுள்ள சபை எல்லாவற்றையும் பறித்துக் கொள்வதால், ஜனங்களின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாயுள்ளது. இங்கே பாஞ்சோப்ராங் (Pancho Frank) என்னும் எளியவன் இருக்கலாம். அவன் ஒரு கொத்தனார் பணி செய்து, வாரத்திற்கு 20 பீசோக்கள் சம்பாதிக்கிறான். அவன் ஒரு ஜோடி பாதரட்சை வாங்க வேண்டுமென்றால் 20 பீசோக்கள் எல்லாம் தேவைப்படும். அது தான் அவர்கள் பொருளாதார நிலையாகும். அங்கு கொத்தனார் பணி செய்கிற அவன் வாரத்திற்கு 20 பீசாக்கள் வாங்குகிறான் என்று வைத்துக்கொள்வோம்.

ஆனால் அவன் எவ்வளவு வாங்குகிறான் என்று எனக்குத் தெரியாது. அத்தகைய பொருளாதாரநிலை இங்கிருந்தால் என்னாவாயிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். கவனியுங்கள், இப்பொழுது, அவன் வாரத்திற்கு இருபது பீசாக்கள் சம்பாதித்தால் எப்படியிருக்கும்.

394 அங்கு சிக்கோ (chico) என்னும் புனைப்பெயர் கொண்டவன் வாரத்திற்கு 5 பீசாக்கள் சம்பாதிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்குப் பத்துக் குழந்தைகள் இருப்பார்கள். ஆனால் யாரோ ஒருவர் கதவைத்தட்டி, [சகோதரன் பிரான்ஹாம் பிரசங்க பீடத்தை அநேக முறைகள் தட்டுகிறார்—ஆசி.] அவன் பாவ நிவர்த்திக்கென்று பீடத்தின் மேல் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்க வேண்டு மென்று சொல்லி, அவன் சம்பாதனையில்

4 பீசாக்கள் வாங்கிக்கொண்டு செல்வார். அந்தப் பீடம் லட்சக்கணக்கான டாலர்கள் மதிப்பு கொண்ட பொன்னினால் செய்யப் பட்டிருக்கும். அங்குதான் காரியம். அது தான் அவர்களுடைய பொருளாதார நிலைமை. அந்தவிதமாகத்தான் தேசங்கள் இருக்கின்றன.

395 அது எல்லாவற்றையும் எடுத்துக் கொள்கிறது. சபை எல்லாவற்றையுமே பிடுங்கிக் கொள்கிறது. ரோமன் கத்தோ லிக்க சபை, அனைத்தையும் தன் கரங் களில் கொண்டுள்ளது. அவ்வளவே. அத்துடன் வேதம் கூறுகிறபடி யூதரின் செல்வமும் அவர்கள் செய்யும் உடன் படிக்கையின் மூலம் ஒன்று சேரும்.

396 அப்பொழுது அந்திக்கிறிஸ்து மிருகமாக மாறுகிறான். அவன் உடன்படிக் கையை முறித்து பலாத்காரன் செய்கிறான்.

அவன் ஸ்திரீயின் சந்ததியில் மீதியாயுள்ள வர்களை பீறிட்டு, வாயினின்று வெள் ளத்தை ஊற்றிவிட்டு, அவர்களுடன் போரி டுவான். அப்பொழுது அழுகையும் புலம் பலும் உண்டாயிருக்கும்.

397 அதே சமயத்தில் மணவாட்டி மகிமையில் கலியாணம் செய்து கொள் கிறாள். பாருங்கள்? நண்பனே! அதை இழந்துவிட வேண்டாம். நான்—நான் அங்கு இருப்பதற்குத் தேவன் தாமே ஒத்தாசை செய்வாராக. அதற்காக நான் என்ன கிரயம் செலுத்த வேண்டுமானாலும் பரவாயில்லை. எவ்வாறாயினும் நான்—நான் அங்கு இருக்க விரும்புகிறேன்.


ஆனால் ருஷியாவோ அவள்
வகிக்கவேண்டிய ஸ்தானம்
என்னவென்பதை உணர்ந்து
கொண்டாள்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 64-07-26 M காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டு கொள்ளுதல்

75 நாற்பது ஆண்டுகளுக்கு முன்புதான் ருஷியா விஞ்ஞானத்துறையில் உலகப் புகழ் பெற்றது. முதலாம் உலக யுத்தத்தின் போது எல்லோரும் ருஷியாவை அசட்டை செய்தனர். அவர்களுக்கு ஒன்றுமே தெரி யாது என்று நாம் அவர்களை இகழ்ந்தோம். அவர்கள் முகம் பூராவும் தாடியை வளர்த்த, பெரிய உருவம் கொண்ட சைபீரியர்கள் என்றும், வலது கைக்கும் இடதுகைக்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரியாது என்றெல்லாம் நாம் கருதி னோம். அது உண்மைதான். ஆனால் ருஷியாவோ அவள் வகிக்கவேண்டிய ஸ்தானம் என்னவென்பதை உணர்ந்து

கொண்டாள். வேதவாக்கியம் நிறைவேற வேண்டுமென்பதற்காகவே அவள் அவ்விதம் செய்ய வேண்டியதாயிற்று. அவள் இன்று விஞ்ஞானத்தில் உலகி லேயே தலை சிறந்து விளங்குகின்றாள். நாம் ஏற்கனவே அவளுக்குப் பின்னணி யில்தான் நிற்கிறோம். உலகம் அனைத் துமே அவளுக்குப் பின்னால்தான் இருக் கின்றது. அவளுக்கும் அறிவு உண்டு என்பதை அவள் அறிந்து கொண்டாள்.

76 கவனியுங்கள் 6000 ஆண்டுக ளுக்கு முன்பிருந்த அதே ஆறுபுலன் களையே மனிதன் இன்றும் பெற்றிருக் கின்றான். இப்புலன்களின் மூலம் மனிதன் தான் வாழும் ஸ்தலத்துடன் தொடர்பு கொண்டு தேவனை சேவித்து வந்தான். சென்ற 75 ஆண்டுகளாக மனிதன் அனேக சாதனைகளைப் புரிந்து, குதிரை வண்டியி லிருந்து விண்வெளிக்குச் செல்லும்

அளவிற்கு முன்னேறிவிட்டான். ஏன்? அவன் தேவன் பேரில் கொண்டிருந்த விசுவாசத்தினின்று அகன்று மனிதனுக்குள் இருக்கும் திறனை உபயோகப்படுத்தத் தொடங்கிவிட்டான். அவன் தேவனை நம்புவதை விட்டு விட்டு, அவனையே நம்பத் தொடங்கி விட்டான். நமது இராணுவமும் கடற்படையும் உள்ளவரை நமக்கு யேகோவா அவசியமில்லை என்று அந்த நாத்தீக ஸ்திரீ கூறினாள். ஆனால் எதுயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை. எனக்கு யெகோவாவைத் தவிர வேறொன்றும் வேண்டாம். இராணுவமும் கடற்படையும் மூழ்கட்டும்- அது நிச்சயம் சம்பவிக்கும்- ஆனால் யெகோவாவோ என்றென்றும் நிலைநிற்பார். நான் அவரில் ஓர் பாகமாகவும், அவருடைய குமாரனில் ஓர் பாகமாகவும் இருக்கும்வரை, நான் அவருடன் என்றென்றும் நிலை நிற்பேன்.

இது என்னுடைய தெரிந்துகொள்ளுதலி னால் கிடைத்ததல்ல. அவர் என்னைத் தெரிந்து கொண்டதனால் கிடைக்கப்பெற்ற சிலாக்கியம் இது. ஆமென். கர்த்தரை எனக்குத் தாருங்கள். இல்லையேல் மரணத்தை எனக்குத் தாருங்கள். நாடுகள் எழும்பும். வீழ்ந்துபோகும். ஆனால் யேகோவா என்றென்றும் இருப்பார். அவர் எல்லா காலங்களிலும் இருப்பார். ரோமா புரி வீழ்ந்தது. எகிப்து வீழ்ந்தது எல்லா வல்லரசுகளும் வீழ்ந்தன. ஆனால் அவரோ எப்பொழுதும் யெகோவா வாகவே இருக்கிறார். ஓ, அல்லேலூயா, நான் பக்தி பரவசமடைகிறேன். இஸ்ரேல் நாட்டைப் போன்று ருஷியாவும் தன் நிலைக்கு வந்துவிட்டாள் . எக்காளப் பண்டிகைக்காக தேவன் இஸ்ரவேலரை தங்கள் சொந்த நாட்டிற்கு விரட்டியடிக்க வேண்டும். அவ்வாறே உரைக்கப்பட்ட

தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்காக, தேவன் ருஷியாவை கம்யூனிஸக் கொள் கைக்கு கொண்டு செல்லவேண்டும்.

77 தமது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முற்பிதாக்கள் நாட்டின் அரசியல் சட்டதிட்டங்களில் (constitution) கையெ ழுத்திட்ட போது, அவர்கள் எல்லா செயல்களிலும் தேவனுக்கு முதன்மை ஸ்தானம் அளித்தனர். ஆனால் இன்றோ அவருடைய நாமம் எங்குமே உச்சரிக் கப்படுவதில்லை. மனிதன் இன்று விஞ்ஞா னத்தின் மகத்துவத்திலும், தந்திரத்திலும் சார்ந்திருக்கிறான். அவர்கள் நெறி தவறிய ஒரு கூட்டத்தார். உலகம் முழுவதுமே வேதாகம அறிவைப் பெற்றிராத நிலையில் உள்ளது. முழு உலகமே தேவனை விட்டு அகன்று சென்றுவிட்டது. ஆயினும், இதன் மத்தியலிருந்தும் தேவன் தம் வார்த் தைக்கென மணவாட்டியை வெட்டியெடுத்

துள்ளார் என்பதை சிந்தித்துப் பாருங்கள். அவர் அவ்விதம் செய்வாரென்று வாக் களித்துள்ளார். அமெரிக்கா தேவனை விட்டுவிட்டது. அவர்கள் அவரைப் பள்ளி களிலிருந்தும் கூடவிரட்டியடித்துவிட்டனர். இதன் விளைவாக சிறு பிள்ளகள் அவரைக் குறித்து கேள்விப்படவும் முடியாது. டாலர் நாணயத்தில் "நாங்கள் தேவன் பேரில் நம்பிக்கையாயிருக்கிறோம்" என்று எழுதப் பட்டுள்ளதையும் கூட அகற்றிவிட முயல் கின்றனர். நாட்டுப் பற்று வாக்குறுதியில், "தேவன் கீழ் ஒன்றுபட்டுள்ள நாடு” என்று எழுதப்பட்டுள்ளதையும் அவர்கள் எடுத்து விடப் போகின்றனர். அவர்கள் தங்கள் உணர்ச்சிகளுக்கும், சுய அறிவுக்கும் திரும்பிவிட்டனர். கடந்து 75 ஆண்டு காலமாக மனிதனின் உருவ அமைப்பில் எவ்வித மாறுதலுமில்லை. ஆதியில் கர்த்தர் அவனைப் படைத்த விதமாகவே அவன்

தோற்றமளிக்கின்றான் ஆனால் இந்த கடைசி நாட்களில் அவன் சுய அறிவின் பேரில் மாத்திரமே சார்ந்திருக்கிறான்.

78 கடந்த 25 ஆண்டு காலமாக இஸ்ரவேல் ஜனங்கள், தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டும் என்பதற்காக ஏதோ ஒன்று தங்களைத் தாய்நாடு கொண்டு சென்றுள்ளது என்பதை உணர்ந்திருக்கின்றனர். அது எப்படி நிகழ்ந்தது என்பது அவர்களுக்குப் புரியவேயில்லை . முத்திரையின் கீழ் அவர்கள் துன்புறுத்தப்பட்டு உயிர்த்தியாகமும் செய்தனர். ஆனால் இப்பொழுதோ அவர்கள் தங்கள் சொந்த நாட்டில் இருக்கின்றனர். எதற்காக அவர்கள் அங்கே குழுமியுள்ளனர் என்பது அவர்களுக்குத் தெரியாது.

79 ருஷியா ஏன் விழித்துக்கொண்டது? ஏனைய நாடுகளும் ஏன் விழித்துக்

கொண்டன? மனிதன் எவ்விதம் இவை களை சாதிக்கமுடிந்தது? 300 ஆண்டு களுக்கு முன்னர், பிரான்சு நாட்டிலிருந்த ஒரு விஞ்ஞானி தன் ஆராய்ச்சியின் மூலம், மனிதன் மணிக்கு 30 மைல்களை காட்டிலும் அதிக வேகம் சென்றால், ஈர்ப்பு சக்தியின்று விடுபட்டு மேலே பறப்பான் என்று கண்டுபிடித்தார். இன்று மனிதன் மணிக்கு 17000 மைல் வேகம் செல்கி றான், இதைக் காட்டிலும் அதிக வேகம் செல்ல முனைகிறான். சமீபத்தில் அவன் அவ்வளவு வேகம் செல்ல முடியும் என்பதைக் கண்டு பிடித்தான். ஏன்? அது அவ்விதம் நிகழ வேண்டும்.

80 அதே சமயத்தில் மணவாட்டியும் சாயங்கால வெளிச்சத்தை அடையாளம் கண்டு கொண்டாள் பெந்தேகோஸ்தே ஸ்தாபனங்களிலுள்ள ஆத்தும பசி கொண் டவர்கள், அவர்களுக்குத் தேவையான

எதுவும் அந்த ஸ்தாபனங்களில் இல்லை என்பதைப் புரிந்து கொண்டனர். இந்த ஸ்தாபனங்களில் சின்னபின்னமாயுள்ளன. இது ஒரு உணர்ந்துகொள்ளும் நேரமாக அமைந்துள்ளது. உலகம் உணர்ந்து கொண்டுள்ளது. நாடுகள் உணர்ந்து கொண்டுள்ளன விஞ்ஞானம் உணர்ந்து கொண்டுள்ளது. பிசாசும் உணர்ந்து கொண்டிருக்கிறான் பெண்களையும், சபையையும், மக்களையும் கொடுக்கவேண்டிய நேரம் இதுவே என்பதை அவன் உணர்ந்து கொண்டிருக்கிறான். தேவனும் நித்திய ஜீவனுக்கென்று முன் குறிக்கப்பட்ட ஒரு கூட்டத்தார் உலகில் உள்ளனர் என்றும், அவருடைய செய்தியை அனுப்புவதற்கு ஏற்ற நேரம் இதுவே என்றும், உணர்ந்து, தமது செய்தியை இப்பொழுது அனுப்பியுள்ளார்.


கம்யூனிஸத்தைக் குறித்து
மறந்துவிடுங்கள்.
பாருங்கள்? அது தேவனைப்
பற்றிய என்னமில்லாத
காட்டுமிரண்டித்தனமான ஒரு
கூட்டமேயன்றி, உலகத்தில்
வேறொன்றுமில்லை
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 63-0324M — முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

216. **கம்யூனிஸம் என்ற பொது உடைமைக் கொள்கையானது நேபுகாத் நேச்சார் இராஜாவைப் போல, தேவனால் தம்முடைய நோக்கம் நிறைவேறத்தக்கதாக எழுப்பப்பட்டதென்று நீங்கள் அநேக முறை சொல்லியிருக்கிறீர்கள். கடைசியில் உண்டாகப் போகும் உலக நிலையில் கம்யூனிஸம் எந்த ஸ்தானத்தில் பொருந்தும்? அது எவ்விதம் முடிவடைகிறது? வேதத்தில் சொல்லப்பட்டுள்ள வடதிசை இராஜ்ஜியங்களாகிய கோகும் மாகோகும் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்**

**பண்ணப்போகும் என்று அநேக கல்வி மான்கள் நம்புகிறார்கள்...(அது என்ன வென்றால் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை, ஆம், ஆம்). கம்யூ னிஸம் கடைசியில் கத்தோலிக்க ஸ்தாப னத்தை அல்லது வாடிகனை வெடியி னால் அழிக்கும் என சில ஒலிநாடாக் களில் நீங்கள் கூறியிருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். இது சரியா?**

367 ஆம், வெளிப்படுத்தின விசேஷம் 16, 18:8 லும், 12-ம் அதிகாரத்திலும் நீங்கள் இதைக் காணலாம். இதை எழுதினவர் இங்கிருப்பாரானால், இங்கு அதைக் குறித்து உள்ள காகிதத் துண்டை எடுத்துக்கொள்ள விரும்புவாரானால்— நீங்கள் அதைக் காணலாம். ஆம் பாருங்கள்? “ஆம்...ஐயையோ! மகா நகரமே...ஒரே நாழிகையிலே இவள்

பாழாய்ப் போனாளே.” பூமியின் வர்த்தகர்களும் மற்றவர்களும் அவளுக்கு சரக்குகளை கொண்டு வந்திருந்தனர். அது அப்படியாயிருக்கும். அது சரி. மேலும்...

368 கம்யூனிஸத்தைக் குறித்து மறந்துவிடுங்கள். பாருங்கள்? அது தேவனைப் பற்றிய எண்ணமில்லாத காட்டுமிரண்டித்தனமான ஒரு கூட்டமேயன்றி, உலகத்தில் வேறொன்றுமில்லை. அது ஒரு அமைப்பாகும்...அது எவ்வளவு சுலபம் என்பதைக் காட்ட, நான் உங்களுக்கு சிலதைக் காட்டட்டும். ஏன், முழு ரஷ்யாவிலுமே ஒரு பங்கு ஜனங்களே இந்த கம்யூனிஸத்தை ஆதரிக்கின்றனர். அவர்களுக்கு ஒரு செய்தியாளன் தேவைப்படுகிறது. பாருங்கள்? ஒரே ஒரு சதவிகிதம்; அப்படியானால் இன்னமும் தொண்ணூற்றொன்பது சதவிகிதம் மக்கள் கிறிஸ்தவர்கள் பக்கம். ஒரே ஒரு சதவிகிதம்; ஒரு

சதவிகிதம் ஜனங்கள் எவ்விதம் தொண்ணூற்றொன்பது சதவிகிதம் மக்களைக் கட்டுப்படுத்தக் கூடும்? இதுவே உங்களுக்கு காரியத்தை விளங்க வைக்க வேண்டும். தேவன் அதை அனுமதிக்கவில்லையென்றால், அவர்கள் அநேக வருடங்களுக்கு முன்பாகவே அக்கொள்கையை வெளியே தூக்கி எறிந்திருப்பார்கள், பாருங்கள்? நிச்சயமாக.



அது ஏற்கனவே மனிதர்களுடைய கரங்களுக்குள் வந்துள்ளது, அவர்கள் விரும்பினால், இந்த உலகத்தை ஒரு மணிநேரத்தில் அழித்துப் போட முடியும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 58-02-02 தீவிரமாய் வந்து அங்கே ஓடித் தப்பித்துக்கொள்

11. இப்பொழுது, ஒரு சில இரவு களுக்கு முன்பு, நான் ஸ்புட்னிக் செயற் கைக் கோளைக் குறித்துப் பேசிக்கொண் டிந்தேன். நான் உங்களிடம் பேசினது முதற்கொண்டு, மூன்று இரவுகளுக்கு முன்பு, அமெரிக்க அரசாங்கம் அல்லது இராணுவம் அவர்களுக்கு ஒரு ஸ்புட்னிக் செயற்கைக்கோளை ஏவியிருக்கின்றனர், அது ஏறக்குறைய ஒவ்வொரு நூறு அல்லது இருநூறு நிமிடங்களுக்கு உலகத் தைச் சுற்றிலும் சுற்றியவாறு போய்க் கொண்டிருக்கிறது. என்ன சொல்லப் பட்டதோ அது சமீபமாய் உள்ளது என்பதை மாத்திரமே அது சுட்டிக்காட்டு கிறது. இப்பொழுது, மனிதர்களும் ஸ்திரீ களும் தங்களுடைய கண்களைத் திறந்து,

தேவனுடைய வார்த்தைக்குள் நோக்கிப் பார்க்க வேண்டியதான ஒரு நாள் எப்பொ ழுதாவது இருக்குமானால், அது இன்று தான் என்று நம்புகிறேன். இதுதான் அந்த நாள், ஏனெனில் அங்கே ஒரு நாளைய தினம் இல்லாமல் இருக்கலாம். சபை யானது எப்பொழுதாவது அதனுடைய ஆயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டுமானால், அது இன்றைய தின மாகத்தான் இருக்க வேண்டும். இன்னும் ஒரு நாள் அதைத் தள்ளிப் போட வேண்டாம். எடுத்துக் கொள்ளப்படுதலில் போவதிலிருந்து உங்களை தடை செய்கிற ஏதாவது காரியம் உங்களுக்கும் தேவனுக் குமிடையே இருக்குமானால், நீங்கள் இப்பொழுதே அதைச் சரிசெய்வது நல்லது. உங்களுடைய இருக்கையை விட்டுப் போய் விட வேண்டாம். சீக்கிரமாய் இருக்கப் போகிற ஆசீர்வதிக்கப்பட்ட கர்த் தருடைய வருகையின் எதிர்பார்ப்புகளில்

நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் அந்த மணி நேரத்திற்காக காத்துக் கொண் டிருக்கிறோம். இயேசு தாமே, ‘இவைகள் சம்பவிக்கத் தொடங்குவதை நீங்கள் காணும் போது, உங்கள் மீட்பு சமீபமா யிருப்பதால், உங்கள் தலையை உயர்த் துங்கள்’ என்று கூறியிருக்கிறார். வானங் களில் அடையாளங்கள், அச்சமூட்டுகிற காட்சிகள், மனிதனுடைய இருதயம் பயத்தினால் செயலற்று போகுதல், சமுத் திரம் முழக்கமாயிருத்தல், ஆழிப் பேரலை கள், பெரிய காரியங்கள் (போன்றவை) சம்பவித்துக் கொண்டிருக்கின்றன.

யாரோ ஒருவர், ‘சகோதரன் பிரன் ஹாமே, நீர ஏன் அந்தக் காரியங்களைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருக்கிறீர்?’ என்று ஒரு வேளை தங்களுடைய தலையில் கூறியிருக்க வேண்டும் என்று நான் அறிவேன். அது என்னுடைய இருதயத்தில் உள்ளது. அது ஒரு வேளை

இன்றும் தாக்கப்பட வேண்டும் என்று நான் அறிவேன்.

12. இப்பொழுது, நாம் பாபிலோனின் பேரிலும் சுவற்றின் மேல் எழுதப்பட்ட கையெழுத்தின் பேரிலும் பேசிக்கொண் டிருந்தோம். மேலும் இன்று நாம் இங்கே யிருக்கையில், நாம் அநேகமாக நம்மு டைய முகத்தில் வீசுகிற நியாயத்தீர்ப்பின் உஷ்ணக்காற்றை உணர முடியும். உலக மானது அதனுடைய முடிவில் வந்துள்ளது. கர்த்தராகிய இயேசுவின் வருகைக்குப் புறம்பே இந்த உலகத்திற்கு ஒரு நம்பிக்கையும் இல்லை. அதுதான் ஒரே நம்பிக்கையாக உள்ளது. நீங்கள் ஒரு ஐசன்ஹோவரை ஒவ்வொரு தேசத்திலும் வைக்க முடியும், அமெரிக்கா இன்னும் பாவத்தில் நடந்து கொண்டிருக்கும்.

நான் எந்த மகத்தான எழுப்புதலுக்காக வும் எதிர்நோக்கியிருக்கவில்லை. அதைக்

குறித்த காரியம் என்னவெனில், எழுப்புதல் வந்து போய்விட்டது, நீங்களோ அதை அறியவில்லை. அது எப்போதுமே அவ்வாறு தான் இருந்து வந்துள்ளது. நீங்கள் ஏதோவொன்றுக்காக எதிர்நோக்கி யிருக்கிறீர்கள், சாத்தான், 'இங்கே மகத் தானது இருக்கப்போகிறது, இங்கே மகத் தானது இருக்கப் போகிறது' என்று தொடர்ந்து கூறிக்கொண்டிருப்பான். மேலும் அது சரியாக உங்கள் பக்கத்தில் கடந்து செல்லும். யோவான்ஸ்நானன் பூமியில் வந்திருந்த போது, நீதிமான்கள் கூட அவனை அடையாளம் கண்டுகொண் டார்களா? சீஷர்கள், 'எலியா எப்போது வருவார்?' என்று கேட்க வில்லையா? அவர், 'அவன் ஏற்கனவே வந்தாயிற்று, நீங்களோ அதை அறியவில்லை' என்றார்.

எழுப்புதலானது சற்று ஏறக்குறைய முடிந்து விட்டது. பெரிதான எதையும் எதிர்நோக்கியிருக்க வேண்டாம். நாம்

ஏற்கனவே வானத்தில் மிகப்பெரிய காரியத்தைப் பெற்றிருக்கிறோம், பரிசுத்த ஆவியானவர் இந்த சந்ததியில் தம்மைத்தாமே வெளிபடுத்திக் கொண்டிருக்கிறார். செய்யப்படக் கூடிய வேறு எதுவும் கிடையாது.

13. ஆனால் உலகமானது வரப்போகிற நியாயத்தீர்ப்புகளை உணருகிறது. செய்தித் தாள்கள்... பென்டகனில் அவர்கள் கூறினதைக் கேட்டிருக்கிறேன், எனக்குத் தெரியாது, ஆனால் என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். நல்லது, என்ன செய்ய வேண்டுமென்று உங்களுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு புத்தகம் மாத்திரமே உண்டு, அதுதான் தேவனுடைய வேதாகமம். என்ன செய்ய வேண்டுமென்று உங்களிடம் கூறக்கூடிய ஒரே காரியம் அதுதான்; உங்களுடைய தலையை உயர்த்தி, மேலே நோக்கிப் பாருங்கள்.

தப்பித்துக்கொள்வதற்கு அங்கே வேறு வழி கிடையாது.

**அது ஏற்கனவே மனிதர்களுடைய கரங்களுக்குள் வந்துள்ளது, அவர்கள் விரும்பினால், இந்த உலகத்தை ஒரு மணிநேரத்தில் அழித்துப் போட முடியும். இப்பிற்பகல் வேளையில், ரஷ்யாவை தடை செய்து வைத்திருப்பது என்ன, ஓட்கா என்ற மதுவகையை அதிகமாகக் குடிக்கக் கூடிய அந்த தலைவர்களில் ஏதாவது ஒருவர், ஒரு பட்டனை அழுத்தி, இந்த முழு உலகத்தையுமே அதனுடைய சுற்றுப் பாதையை விட்டு வெளியே அனுப்புவார், அது வேதவாக்கியங்களுடன் சிறிதளவும் முரண்பட்டிருக்காது. அங்கேதான் நீங்கள் இருக்கிறீர்கள். பாருங்கள், நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம்.**

**ஆப்பிள் பழத்திற்கு தீங்கு விளைப்பது ராபின் பறவை அதைக் கொத்துவதனால் அல்ல, அதைக் கொல்வது அதன் உட்பகுதியிலுள்ள புழு தான். நமது மத்தியிலுள்ள நம்முடைய சொந்த அழுகிப்போன தன்மை தான் நம்மைக் கொன்று கொண்டிருக்கிறது**

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 58-05-28 மேசியாவின் அடையாளம்

ரஷ்யா இங்கே வந்து... செய்யப் போகிறதோ என்பதைக் குறித்து நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதைக் குறித்து கவலைப்பட வேண்டாம். ஆப்பிள் பழத்திற்கு தீங்கு விளைப்பது ராபின் பறவை அதைக் கொத்துவதனால் அல்ல, அதைக் கொல்வது அதன் உட்பகுதியிலுள்ள புழு தான். நமது மத்தியிலுள்ள நம்முடைய சொந்த அழுகிப்போன தன்மை தான் நம்மைக் கொன்று கொண்டிருக்கிறது.

25. தேவனுக்காக நின்ற முதுகெலும் புடைய மனிதர்களும் ஸ்திரீகளுமாக உள்ள உண்மையான கிறிஸ்தவனாக நாம் இருந்தோம்... புதன்கிழமை இரவு

சபைக்குப் போவதற்குப் பதிலாக, ராக்-அன்ட்-ரோல் தொலைக்காட்சியைக் காண்பதற்கும், மற்றும் ஆர்தர் காட்பிரேயைக் காண்பதற்கும், ரேடியோவிலுள்ள இந்த மற்ற எல்லா ஜனங்களையும், நாங்கள் சுசியை நேசிக்கிறோம் என்பதையும் காண்பதற்கு நாம் வீட்டிலேயே தங்கி விடுகிறோம். நீங்கள் தேவனை நேசிப்பதைக் காட்டிலும் உலகத்தையே அதிகம் நேசிக்கிறீர்கள் என்பதையே அது காட்டுகிறது. உங்களுடைய இருதயம் தேவனுக்காக இருக்குமானால், தேவனே முதலாவது வந்து, அதுவே உங்கள் இருதயத்தில் முழுவதுமாக இருக்கும்.

**அதாவது, நாம் நம்மை ரஷ்யாவுடன் பிணைத்துக் கொண்டு ரஷ்யாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்த போது... "இருவர் மனம் ஒருமித்திருந்தாலொழிய எவ்வாறு ஒருமித்து நடந்து செல்ல முடியும்?"**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 54-07-23 தீர்க்கதரிசியாகிய எலிசா

5. நம்முடைய பாடத்தின் சமயத்தின் போது, அப்போது தான் ஆகாப் மரித்திருந்தான். நீங்கள் அறிந்துள்ளபடி, யேசபேல், யெகூவின் மூலமாக, ஸ்திரீ களுக்குக் காவலாக நியமிக்கப்பட்டிருந்த (eunuchs) சிலரால் ஜன்னலுக்கு வெளியே எறியப்பட்டாள். நீதிமானாகிய நாபோத் தைக் கொன்று, அவனிடமிருந்து திருடப் பட்ட அவனுடைய திராட்சத் தோட்டத்தை எடுத்துக் கொண்டதற்காக, அது போன்றே அவளுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று எலியா தீர்க்கதரிசனம் உரைத்திருந்தான் (1 இராஜா. 21:19, 23). இந்த அழகான ஆனால் இருதயத்திலோ துன்மார்க்கமான சிறு இராஜஸ்திரீயாகிய

யேசபேலின் சரீரம் முழுவதையும் உண்மையாகவே நாய்கள் சாப்பிட்டன. நாய்கள் சாப்பிட்ட இடத்தில், வீதிகளில் அவளுடைய உள்ளங்கைகளும் மற்றவை களும் தான் மீதமிருந்தன.

பிறகு (ஆகாபின் குமாரனாகிய) யோராம் ஆகாபின் ஸ்தானத்தில் அரசாண்டான். அவன் தன்னுடைய தகப்பனைப் போல் முழுவதும் பொல்லாதவனாக இருக்க வில்லை. அவனுடைய தகப்பன் ஒரு விதத்தில் ஒரு எல்லைக் கோட்டு விசுவாசியாக இருந்தான். நாம் இன்னும் இன்றைக்கும் அப்படிப்பட்ட அநேகரைக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அப்படியே எல்லைக் கோட்டிலேயே இருப்பவர்கள்: காற்று எந்த வழியாக வீசுகிறதோ, ஏன், அவர்களும் அதனோடு கூட போகிற வர்கள். ஆனால் யோராமோ பாகாலின் சிலைகளை அகற்றி விட்டான், ஆனால்

அவன் செய்யக் கூடாத பாவங்களில் இன்னும் சிக்கிக் கொண்டிருந்தான் (clave).

6. ... தேசத்து, ஒருக்கால் அவனுடைய தகப்பனைக் குறித்து மோவாபின் இராஜாவுக்கு சிறிது பயம் இருந்தது, ஏனென்றால் ஆகாபிடம் ஒரு பெரிய இராணுவம் இருந்தது. அவனுடைய இராஜ்யபாரத்தின் போது, இஸ்ரவேலர் ஓரளவுக்கு நல்ல ஒற்றுமையோடு இருந்த னர். எனவே அவன் (மோவாபின் இராஜா) பல்லாயிரக்கணக்கான செம்மறியாடுகளை அனுப்பினான், ஏனெனில் மோவாபின் இராஜா ஆடுமாடுகள் பெருத்தவனாயிருந் தான் (sheep master)... அநேக. அவன் ஒருவிதத்தில் இரண்டு தேசங்களுக்கு இடையே சமாதானத்தைக் காத்துக் கொள்ள இந்த செம்மறியாடுகளை அனுப் பினான். ஆனால் பிறகு, ஒருவேளை அவனுடைய (ஆகாபுடைய) குமாரன்

அவன் ஸ்தானத்தில் இராஜாவான பிறகு, நல்லது, ஒருக்கால் அவன் வந்து அவைகளை மீண்டும் திரும்ப எடுத்துக் கொண்டு செல்ல விரும்பினான். இவ்வித மிருக்க அவனுடைய குமாரன் அவன் தகப்பனைப் போன்று யுத்த வீரனாக இருக்கவில்லை என்பதை அறிந்தான்.

எனவே இச்சமயத்தில் அங்கே - யூதாவிலோ யோசபாத் இராஜாவாக இருந்தான். யோசபாத் ஒரு நீதிமானாகவும் தேவனுக்கு பயப்படுகிற ஒரு மனிதனாக வும் இருந்தான்.

7. இப்பொழுது, இந்த யோராம், மோவாபின் இராஜா தன்னுடன் யுத்தத்தை அறிவிக்கப் போகிறான் என்பதை கண்டு கொண்ட பிறகு, ஏன், அவன் யூதாவுக்குச் சென்று, இந்த மோவாபின் இராஜாவுடன் யுத்தம் பண்ணும்படி செல்ல யோசபாத்தின்

எத்தனங்களும் அவனுடன் சேருமா என்று யோசபாத்திடம் கேட்டான்.

இப்பொழுது, நான் இங்கே சற்று நேரம் அழுத்தமாக கூற விரும்பும் ஒரு கருத்து என்னவென்றால், விசுவாசிகள் தங்களை அவிசுவாசிகளுடன் பிணைத்து விடுவதைப் பற்றியது தான். அது (கிரியை) செய்வதில்லை... ஏன், அது கிரியை செய்வதேயில்லை. தேவன் அதில் பிரியமாயிருப்பதில்லை. தேவன், "அவிசுவாசிகளிடமிருந்து வெளியே வாருங்கள்" என்றே சொல்லியிருக்கிறார். பாருங்கள்? இரவையும் பகலையும் ஒன்றாக சேர்க்க உங்களால் இயலாது. விசுவாசத்தையும் அவிசுவாசத்தையும் ஒன்றாக சேர்க்கவும் உங்களால் முடியாது. மேலும்-மேலும் நீங்கள் அவிசுவாசத்தைக் காணும்போது, அது வெறுப்போடு இணைந்தே செல்கிறது. நீங்கள் விசுவாசத்தைக் கண்டு கொள்ளும் போது, அது அன்போடு இணைந்து

செல்கிறது. அன்பு விசுவாசத்தை உருவாக்குகிறது. ஏன், விசுவாசமின்றி, உங்களால் அன்பைக் கொண்டிருக்க முடியாது.

8. இப்பொழுது அதன்பிறகு, இந்த விசுவாசியான யோசபாத் ஒரு பெரிய இராஜ்யத்தைக் கொண்டிருந்த யாரோ ஒருவனுக்கு மரியாதை செலுத்த விரும்புகிறான், அநேகமாக அவனுடைய நாளில் இருந்த இந்த வாலிப இராஜாவைக் குறித்த கௌரவத்தினால், அவன் அதைச் செய்ய வேண்டுமா அல்லது வேண்டாமா என்று தேவனிடம் ஆலோசனை கேட்பதற்கோ அல்லது தேவனிடம் கேட்கும் முன்பாக, அவன் சத்துருவுடன் யுத்தம் பண்ணும்படி செல்ல தன்னுடைய இராணுவத்தைக் கூட்டினான், அவன் மோவாபியரை விடவும் மோசேமான அல்லது சீர்கெட்ட அதேபோன்ற ஒரு சத்துருவுடன் அவன் தன்னைப் பிணைத்துக் கொண்டிருந்தான் என்பதை உணரவில்லை.

**சென்ற உலகப் போரின் போதும் நாம் அதே காரியத்தையே செய்தோம் என்று நான் எண்ணுகிறேன். இதன் பேரில் பேசுவதற்கு இன்றிரவு நமக்கு நேரம் இருக்க விருப்ப முண்டு, ஆனால் நமக்கு நேரமில்லை. அதாவது, நாம் நம்மை ரஷ்யாவுடன் பிணைத்துக் கொண்டு ரஷ்யாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்த போது... "இருவர் மனம் ஒருமித்திருந்தாலொழிய எவ்வாறு ஒருமித்து நடந்து செல்ல முடியும்?" பாருங்கள்? அவர்கள் - நாம் சிலுவையைப் புறக்கணித்து விட்டோம், அதற்காக நாம் இரண்டு மடங்கு சிலுவையைப் பெற்றுக் கொண்டோம். இப்பொழுது, நாம் அவர்களிடம் அனுப்பின அதே சாதனத்தை திருப்பி நம்மிடமே அவர்கள் வீசி எறியப் போகிறார்கள் என்பது போன்று தோன்றுகிறது.**

நல்லது, உலகம் போகிற வழி அதுதான், ஆனால் ஒருநாள், அங்கே நீதியின் இராஜா வருவார், அதற்கு மேலும்

யுத்தம் இருக்காது. அதற்கு மேல் துக்கம் இருக்காது, எல்லாம் முடிந்து விடும். தானியேல் கண்ட மலைகளிலிருந்து பெயர்ந்து விழும் கல் வரும் மட்டுமாக, உலகத்தின் இராஜ்யங்கள் சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் இன்னும் இருக்கிறது. அவைகள் தன்னுடைய இராஜ்யங்கள் என்று சாத்தான் கூறினான்; இயேசுவும் அதை ஒப்புக் கொண்டார். அவர் அவனை வணங்கினால், அவைகளை இயேசுவுக்குக் கொடுப்பதாக அவன் வாக்களித்தான். இயேசு எப்படியும் அவைகளுக்கு சுதந்தர வாளியாய் இருப்பார் என்பதை அறிந்தவ ராய், “எனக்குப் பின்னாகப் போ, சாத் தானே. “உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக” என்று எழுதி யிருக்கிறதே” என்றார்.

# விஞ்ஞான ஆராய்ச்சி



## உண்மையான கிறிஸ்தவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் காரியங்களில் ஈடுபட மாட்டார்கள். நிச்சயமாக இல்லை.

சகோ. பிரன்ஹாம்

செய்தி: இப்பொல்லாத காலத்தின் தேவன், பத்தி எண் 95

# ரஷ்யா 2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து